# Tamil Murli Quiz 13-04-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** சரியான விடைடையைத் தேர்ந்தெடுக்கவும்:
**அனைத்து யுகங்களிலும் உத்தமானது இந்த சங்கமயுகமாகும், இங்கு தான் ஆத்மாக்களாகிய நீங்கள் பரமாத்மா தந்தையோடு சந்திப்பு செய்கின்றீர்கள், இதுதான் மிகவும் உண்மையான ______________________.**

A. நிகழ்வாகும்
B. யுகமாகும்
C. கும்பமேளாவாகும் (selected)
D. உறவாகும்

**Q.2)** சரியா? தவறா?
**உங்களை சொர்க்கவாசியாக ஆக்குவதற்கு தந்தை வந்திருக்கிறார். சந்நியாசிகள் நான் உங்களை சொர்க்கவாசியாக ஆக்குவேன் என கூறினாலும் அவர்களால் அதனை உண்மையாக செய்ய இயலாது.**

A. சரி
B. தவறு (selected)

**Explanation:** பாபா கூறுகிறார் "நான் உங்களை சொர்க்கவாசியாக ஆக்குவேன் என வேறு எந்த மனிதரும் கூற முடியாது. சந்நியாசிகளுக்கு சொர்க்கம் மற்றும் நரகத்தைப் பற்றி எதுவும் தெரியாது. மற்ற தர்மங்களைப் போன்று சந்நியாகிகளுக்கும் ஒரு தர்மம் இருக்கிறது"

**Q.3)** சரியான 2 (இரண்டு) விடையைத் தேர்ந்தெடுக்கவும்:
**ஏன் நாடகத்திற்கு ஆரம்பம் மற்றும் முடிவு என்பது இல்லை?**

A. அது இரகசியம்
B. இந்த நாடகம் முன்பே உருவாக்கப்பட்டது (checked)
C. இந்த நாடகத்தை வேறு யாரும் உருவாக்கவில்லை (checked)
D. இந்த நாடகத்தை பகவான் அவ்வாறே உருவாக்கியுள்ளார்

**Q.4)** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:
**தந்தை இப்போது நம்மை அழைத்துச் செல்ல வந்திருக்கிறார். தந்தை வழிகாட்டியாகவும் இருக்கிறார் அல்லவா! நீங்கள் அனைவரும் வழிகாட்டிகள். வழிகாட்டி யாத்திரைக்கு அழைத்துச் செல்ல வந்திருக்கிறார். அவர்கள் ஸ்தூல வழிகாட்டிகள், நீங்கள் ஆன்மீக வழிகாட்டிகள். எனவே உங்களுடைய பெயர் _____________________, ஆனால், இரகசியமாக இருக்கிறது.**

A. சிவ ஷக்தி சேனையாகும்
B. பாண்டவ அரசாங்கமாகும் (selected)
C. ஆன்மிக யாத்திரையை மேற்கொள்வோர்
D. சிறந்த வழிகாட்டிகள்

**Q.5)** சரியான விடையைத் தேர்ந்தேடுக்க்வும்:
**சிலர் நன்றாக தாரணை செய்கின்றனர், சிலர் நடுத்தரமாக, சிலர் மூன்றாம், சிலர் நான்காம் வரிசையில் உள்ளனர். கண்காட்சியில் எப்படிப்பட்டவர்கள் தேவை?**

A. உறுதியாக ஞானத்தை சொல்பவர்கள்
B. சந்தேகங்களை தெளிவாக புரிய வைப்பவர்கள்
C. மிகத் தெளிவாக புரிய வைப்பவர்கள் (selected)
D. கருத்துக்களை கட்சிதமாய் எடுத்துரைப்பவர்கள்

**Q.6)** <u>சரியான 3 (மூன்று) விடைகளைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**தந்தை கூறுகின்றார் குழந்தைகளே, புருஷோத்தம நிலை அடைய வேண்டுமானால்,**

- A. ☐ ஞான கருத்துக்களை மிகத் தெளிவாக புரிய வைக்க வேண்டும்
- B. ☑ தாழ்ந்த நிலை அடைய வைக்கும் விசயங்களை கேட்காதீர்கள்
- C. ☑ ஒரு தந்தையிடமிருந்து மட்டுமே கேளுங்கள்
- D. ☑ கலப்படமில்லாத உயர்ந்த ஞானத்தை கேட்க வேண்டும்

**Q.7)** <u>சரியா? தவறா?</u>

**நீங்கள் தான் சக்கரத்தில் சுற்றி வந்து இப்பொழுது மீண்டும் சந்திக்கின்றீர்கள். யாரெல்லாம் மற்ற தர்மங்களுக்கு மாறிச் சென்றுள்ளார்களோ அவர்களும் வந்து சந்திப்பார்கள். தனது பிராப்தியை கொஞ்சமாவது அடைவார்கள்.**

- A. ◉ சரி
- B. ○ தவறு

**Q.8)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**இவ்வுலகில் அனைவரும் ஒருவொருக்கொருவர் துன்பம் தருகின்றனர். எனவே, இந்த பழைய உலகை மறந்து விடுங்கள். நாம் அசரீரியாக வந்தோம், மீண்டும் அசரீரியாகி வீடு திரும்ப வேண்டும். இப்பொழுது இந்த உலகம் முடிந்தே தீரும். தமோபிரதானத்திலிருந்து சதோபிரதானமாக ________________________________________ என தந்தை கூறுகின்றார்.**

- A. ○ உங்களின் அனைத்து 84 பிறவிகளை நினைவு கூருங்கள்
- B. ○ ஆத்ம அபிமானியாகுங்கள்
- C. ◉ மனதால் என்னை நினைவு செய்யுங்கள் (மன்மனாபவ)
- D. ○ ஞானத்தை முழுமையாய் தாரணை செய்யுங்கள்

**Q.9)** <u>சரியா? தவறா?</u>

**அவரைத்தான் சுகம், சாந்தியின் கடல் எனக் கூறப்படுகின்றது. ஞானம் கூறுவதற்கு அவருக்கு சரீரம் அவசியம் வேண்டுமல்லவா! பகவானின் மொழி என்னவென்று யாருக்கும் தெரியாது. பாபா ஹிந்தியில் மட்டுமே பேசுவார் என்பதல்ல. எல்லா மொழிகளிலும் அவர் பேசுவார்.**

- A. ○ சரி
- B. ◉ தவறு

**Explanation:** பகவானின் மொழி என்னவென்று யாருக்கும் தெரியாது. பாபா எல்லா மொழிகளிலும் பேசுவார் என்பதல்ல. ஹிந்தி மட்டுமே அவருடைய மொழியாகும். பாபா ஒரு மொழியால் மட்டுமே புரியவைக்கின்றார், பிறகு நீங்கள் மொழி பெயர்ப்பு செய்து புரிய வைக்கின்றீர்கள்.

**Q.10)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**திவ்யபுத்தி எனும் லிஃப்டை பயன்படுத்த வேண்டுமானால் _______________ கவனம் நிறைந்தவர்களாக இருந்து ஸ்மிருதி என்ற ஸ்விட்சை சரியானபடி செட் பண்ண வேண்டும். அதிகாரி ஆகி இந்த லிஃப்டை காரியத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் சகஜ யோகி ஆவீர்கள், கடின உழைப்பு முடிந்து விடும்.**

- A. ○ சதா
- B. ○ எங்கிருந்தாலும்
- C. ◉ அமிருத வேளையில்
- D. ○ ஆத்ம அபிமானியாகி